புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜூன் 27, 2024 • புரட்சி 24 • முழக்கம் 24 • விலை ரூ.3.00

## தலைவர் பிறந்தநாளையொட்டி உடற்கொடை வழங்கும் தோழர்கள்

# தாரமங்கலம் பொதுக்கூட்டத்தில் படிவம் வழங்கினர்

தாரமங்கலம் நகரக் கழகத்தின் சார்பில் “குடிஅரசு இதழ் மற்றும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா” பொதுக்கூட்டம் 20.06.2024 அன்று தாரமங்கலம் அண்ணா சிலை அருகில் நடைபெற்றது.

கூட்டத்திற்குப் பவளத்தனூர் சரவணன் தலைமை தாங்கினார், கே.ஆர்.தோப்பூர் கண்ணன் வரவேற்புரையாற்றினார், தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு, நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன், கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணித் தலைவர் தங்கதுரை, குடந்தை பாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் முதல் நிகழ்வாக உமாபதி - பொன்ராஜ் குழுவின் அரசியல் நையாண்டி மற்றும் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர் சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாஷ் தொடக்கவுரையாற்றினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

கே.ஆர்.தோப்பூர் கணேசன் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

இதில் தாரமங்கலம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் R.பாலகிருஷ்ணன், நகரமன்றத் தலைவரும், தாரமங்கலம் நகரச் செயலாளருமான டி.எம்.குணசேகரன் மற்றும் சேலம், சென்னை, திருப்பூர், கோவை, ஈரோடு, பாண்டிச்சேரி, திண்டுக்கல், கரூர், நாமக்கல், தருமபுரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் இருந்து தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




### பொதுக்கூட்டத் துளிகள்

• 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்களை எடுத்த கழக குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்களைப் பாராட்டும் விதமாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நினைவுப் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்.

• எச்சில் இலையில் உருள்வது யாரால்? குடிஅரசு கையேடு மற்றும் குடிஅரசு வழக்கு - முழுத் தகவல்கள் உள்ளிட்ட மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன.

• கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் 77வது பிறந்தநாளை முன்னிட்டு கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

• கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் 77வது பிறந்த நாளை முன்னிட்டு கழகத் தோழர்கள், தாங்கள் இறந்த பிறகு தங்களது உடலை மருத்துவ ஆய்வுக்காக ஒப்படைப்பதற்காக உடற் கொடை வழங்க முடிவெடுத்து, அதற்கான படிவத்தை பூர்த்தி செய்து கழகத் தலைவரிடம் பொதுக்கூட்ட மேடையில் சமர்ப்பித்தனர்.

குறிப்பு: விடுபட்டவர்கள் பெயர் அடுத்த இதழில் இடம்பெறும்

### பட்டியல்

**சென்னை**

1. அருண்குமார், இராயப்பேட்டை, சென்னை
2. உமாபதி, இராயப்பேட்டை, சென்னை
3. குமார், மயிலாப்பூர், சென்னை
4. சூர்யா, இராயப்பேட்டை, சென்னை
5. பெரியார் நம்பி, திண்டுக்கல்
6. விஜயகுமார், ஆதனூர், காஞ்சிபுரம்

**திருப்பூர்**

1. சங்கீதா, ஆத்துப்பாளையம், திருப்பூர்
2. தனபால், ஆத்துப்பாளையம், திருப்பூர்
3. முத்துக்குமார், பொங்குபாளையம், திருப்பூர்
4. வசந்தி, பொங்குபாளையம், திருப்பூர்
5. முத்துலட்சுமி, அனுப்பர்பாளையம், திருப்பூர்

**திண்டுக்கல்**

1. மீனா லட்சுமி, ஆயக்குடி, பழனி
2. மாக்சிம் கார்க்கி, ஆயக்குடி, பழனி
3. மருதமூர்த்தி, பழனி
4. ஆயுதன், பழனி
5. கௌசின் பானு, ஆயக்குடி, பழனி
6. சங்கர், ஆயக்குடி, பழனி
7. பெரியதுரை, கனக்கன்பட்டி, பழனி
8. ரேகா, கனக்கன்பட்டி, பழனி
9. முருகேசன், பழைய ஆயக்குடி, பழனி
10. ராஜா, கனக்கன்பட்டி, பழனி

**கோவை**

1. கிருட்டிணன், பீளமேடு
2. இராஜாமணி, பீளமேடு
3. விடுதலைச் செல்வன், செஞ்சேரிமலை

# பள்ளிகளில் ஜாதி மோதல்களைத் தவிர்க்க வழி

## ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு அறிக்கை சமர்ப்பிப்பு!

**கடந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் அரசுப் பள்ளி மாணவரை, சக மாணவர்களே வீடு புகுந்து வெட்டினார்கள். இந்த சம்பவத்தை அடுத்து பள்ளி, கல்லூரி மாணவர்கள் இடையே ஜாதி, இன உணர்வுகளால் உருவாகும் வன்முறைகளைத் தவிர்க்கவும், நல்லிணக்கம் ஏற்படுத்தவும், அதற்கான வழிமுறைகளை வகுக்கவும் தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. அதன்படி ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டது. அவர் விரிவாக ஆய்வு செய்து அறிக்கையை தயாரித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கியுள்ளார். பள்ளிச்சூழலில் ஜாதிய மோதல்கள், விவாதங்களைத் தவிர்க்கும் பொருட்டு பல நல்ல ஆலோசனைகள் அந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.**




**அவை பின்வருமாறு :**

• ‘கள்ளர் மறுசீரமைப்புப் பள்ளி, ஆதிதிராவிடர் நலப்பள்ளி போன்றவற்றை நீக்கி, அரசுப் பள்ளி என அழைக்க அரசாணை வெளியிட வேண்டும்.

• பள்ளிப் பெயரில் ஜாதி அடையாளங்கள் இருக்கக்கூடாது என்ற உறுதிமொழி பெற்ற பின்னரே, புதிய பள்ளித் துவங்க அனுமதி அளிக்க வேண்டும்.

• தனியார் பள்ளிகளுக்கு ஜாதி பெயர் இருந்தால், அதை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

• மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பழங்குடியினர் நலத்துறை பள்ளிகள் உட்பட அனைத்து வகையான பள்ளிகளும், பள்ளிக்கல்வித்துறையின் கீழ் உடனடியாக கொண்டு வர வேண்டும்.

• உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களை, குறிப்பிட்ட கால இடைவெளியில் இடமாற்றம் செய்ய வேண்டும்.

• குறிப்பிட்ட ஜாதி அதிகமாக உள்ள பகுதிகளில், அதே சமூகத்தை சேர்ந்தவர்களை, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலராக, மாவட்டக் கல்வி அலுவலராக, தலைமை ஆசிரியர்களாக நியமிக்கக்கூடாது.

• ஆசிரியர்களை தேர்வு செய்யும் போது, சமூக நீதி சார்ந்த, அவர்களின் நிலைப்பாட்டைக் கண்டறிய வேண்டும்.

• தலைமை ஆசிரியர்கள் பட்டியலின, பழங்குடியின மாணவர்களிடம் நடந்து கொள்ளும் விதம் குறித்து ஆய்வு செய்து, ஆண்டறிக்கை தயார் செய்ய வேண்டும்.

• பள்ளி, கல்லூரி, பல்கலை ஆசிரியர்களுக்கு நடத்தை விதிகளை உருவாக்க வேண்டும்.

• சமூக பிரச்னைகள், ஜாதியப் பாகுபாடு, பாலியல் வன்முறைகள், போதைப்பொருள் தடுப்பு போன்றவை குறித்து ஆசிரியர்களுக்குக் கட்டாயம் பயிற்சி தர வேண்டும்.

• வருகைப் பதிவேட்டில் மாணவர்களின் ஜாதிப் பெயர் இடம்பெறக் கூடாது.

• ஆசிரியர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஜாதியைக் குறிப்பிட்டு மாணவர்களை அழைக்கக்கூடாது.

• வகுப்பறையில் கல்வி உதவித்தொகை பெறும் மாணவர்களின் பெயர்களை அறிவிக்கக்கூடாது. அவர்களின் ஜாதி விபரங்களை ரகசியமாக வைக்க வேண்டும்.

• மாணவர்கள் தங்கள் கைகளில் வண்ணக் கயிறுகள், நெற்றியில் திலகம்

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

## தலையங்கம்

# தனிச்சட்டமே தீர்வு!

திருநெல்வேலி மாவட்டத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது தொடர்பாக சட்டப்பேரவையில் முதலமைச்சர் மிக நீண்ட விளக்கம் ஒன்றை அளித்திருக்கிறார். தாக்குதலில் ஈடுபட்ட ஜாதிச் சங்கத்தை சேர்ந்தவர்கள் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்து அதில் விளக்கியிருக்கிறார். அத்துடன், ‘‘சமூகநீதிக் கொள்கையை தனது உயிர் மூச்சாகக் கொண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், பெண் கல்வி – சமஉரிமை – ஜாதி மறுப்புத் திருமணம் ஆகியவற்றை தனது ஆரம்பகாலம் தொட்டே ஆதரித்து வரக்கூடிய இயக்கமாகும். இதனை இந்த அவையில் உள்ள அனைவரும் அறிவார்கள்’’ என்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஜாதிப்புனிதம் கெட்டுவிடாமல் பாதுகாப்பதில் தான் இந்து மதத்தின் பெருமை அடங்கியிருக்கிறது. அத்தகைய ஜாதிப் புனிதத்தை காக்க வேண்டிய பொறுப்பு முழுமையாக பெண்களிடமே இருக்கிறது என்கிறது மனு சாஸ்திரம். ‘‘பெண்கள் குழந்தைகளாக இருக்கும்போது தகப்பனாரின் கட்டுப்பாட்டிலும் திருமணமான பிறகு கணவனின் கட்டுப்பாட்டிலும் கணவன் இறந்த பிறகு, பிள்ளைகளின் கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டுமே தவிர, பெண்கள், தாங்கள் விரும்புகிறபடி (சுயமாக சிந்தித்து) ஒரு போதும் இருக்கக் கூடாது.’’ என்று மனு சாஸ்திரம் கூறுகிறது. (அத்தியாயம் 5, சுலோகம் 148.). அதாவது ஒரு பெண் தனது பிறப்பு முதல் இறப்பு வரை சுய சிந்தனையோடு வாழவே கூடாது என்பதே மனுசாஸ்திரம் விதிக்கும் நிபந்தனை. அதை ஜாதி இந்துக்கள் அப்படியே பின்பற்றுவதன் அறிகுறியே ஜாதி மறுப்புத் திருமணங்களை எதிர்ப்பதும், அதையும் மீறி நடந்துவிட்டால் தாக்குவதுமான சம்பவங்களுக்குக் காரணமாக இருக்கிறது.

இந்தப் போக்கை தகர்க்க வேண்டுமென்றால், பெண்களை அதிகாரமிக்கவர்களாக மாற்ற வேண்டும். பெரியாரின் பெண்ணுரிமை சிந்தனைகள் அதை நோக்கியே உள்ளது. பெண்கள் அடுப்படியை விட்டுவிட்டு, புத்தகங்களை கையிலெடுக்க வேண்டுமென்று பெரியார் வலியுறுத்தியதும் அதற்காகவே. கல்வி ஒன்றே பெண்களை ஜாதியக் கட்டமைப்பில் இருந்து விடுவிப்பதற்கான அடித்தளத்தை கொடுக்கும். அக்கல்வியில் இருந்து கிடைக்கப்போகும் வேலைவாய்ப்பும், அதிலிருந்து கிடைக்கும் பொருளாதாரத் தன்னிறைவுமே சமூகத்தடைகளை ஒவ்வொன்றாகத் தகர்க்கும். நீதிக்கட்சி காலம் தொட்டு கடந்த ஒரு நூற்றாண்டாக ‘திராவிட மாடல்’ செய்துகொண்டிருப்பதும் அதுவே.

அதை சட்டமன்றத்தில் எடுத்துரைத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ‘‘நெல்லை சம்பவம் போன்ற குற்றங்களை வெறும் குற்றவியல் நிகழ்வாக மட்டும் பார்க்காமல், இதன் சமூகப் பொருளாதார பின்னணிக் காரணிகளை வைத்து அவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது, குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுத் தருவது ஒருபுறம் இருந்தாலும், சமுதாயத்தில் பொருளாதார வளர்ச்சியின் மூலமாக பெண் கல்வி உயரும்போதும், கல்வி பொருளாதாரம், வேலைவாய்ப்பில் ஒரு வளர்ச்சி பெற்ற சமுதாயமாக உயரும்போதும் இதுபோன்ற குற்றங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும். அதுபோன்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதிலும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம், அதன் காரணமாகவே, நாம் நடைமுறைப்படுத்தும் புதிய திட்டங்களில் எல்லாம் பெண்களின் வாழ்க்கையை, வாழ்வாதாரத்தை, கல்வியை, அவர்களது உரிமைகளை மேம்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகின்றோம்’’ என்று கூறியிருப்பது நீண்டகால இலக்கை தெளிவுபடுத்தும் பதிலாக அமைந்திருக்கிறது.

ஜாதி மறுப்புத் திருமணங்களுக்கு எதிரான அனைத்து குற்றங்களின் வழக்குகளையும் விரைந்து நடத்த சிறப்பு குற்றவியல் வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவர் என முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். சமூக நீதி சிந்தனைகளை உள்வாங்கிய வழக்கறிஞர்களை மட்டுமே இத்தகைய வழக்குகளுக்கு நியமிப்பது ஜாதி மறுப்பு இணையர்களுக்கு பாதுகாப்பைத் தரும்.

அதேவேளையில், ‘‘இதற்கென ஒரு சிறப்புச் சட்டத்தைக் கொண்டுவருவதைவிட, தற்போது இதுபோன்ற குற்றங்களுக்கு நடைமுறையிலுள்ள சட்டப்பிரிவுகள், குறிப்பாக வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில், தீவிரமான, வேகமான நடவடிக்கை எடுத்து குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது சரியானது என்று இந்த அரசு கருதுகிறது.’’ என்று முதலமைச்சர் குறிப்பிட்டிருக்கும் வார்த்தைகள் முற்போக்காளர்களை சற்றே அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது. கல்வி– வேலைவாய்ப்பு – பொருளாதாரத்தில் வேகமாக முன்னேறி வரும் தமிழ்நாட்டில், ஜாதிய பிற்போக்குத்தனங்களில் இருந்து இளைஞர்கள் விடுபடுவதும் வேகமாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் ஒன்றியத்தில் கடந்த 10 ஆண்டுகால பாஜக ஆட்சியின் மதவாத செயல்பாடுகளாலும், மாநிலத்தில் 10 ஆண்டுகால அதிமுக அரசாலும் ஜாதிச் சங்கங்கள் முன்பை விட இப்போது வலிமையடைந்திருக்கின்றன என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இதுபோன்ற ஜாதிச் சங்கங்களின் பின்புலத்தோடு நடந்தேறும் வன்கொடுமைகள், ஆணவப் படுகொலைகளை கட்டுப்படுத்த வழக்கமான சட்ட நடவடிக்கைகள் மட்டுமே போதுமானதாக இல்லை என்பதை அரசு உணர வேண்டும். ஜாதியவாதிகளின் வளர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எதிர்மறை தாக்கத்தையே ஏற்படுத்தும் என்பது கண்கூடு. மோடியின் மதவாத ஆட்சியால் ஜாதிச் சங்கங்கள் பெற்றிருக்கும் துணிச்சலையும், ஆணவத்தையும் அடக்கிட ‘‘ஆணவப் படுகொலைகளை தடுக்க தனிச்சட்டம்’’ இயற்றப்பட வேண்டியது அவசியம் என்பதே பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்சிய இயக்கங்களின் கோரிக்கை. அந்த கோரிக்கையின் நியாயத்தை புறக்கணிக்கும் வகையில் அமைந்திருக்கிறது ‘தனிச்சட்டம் தேவையில்லை’ என்ற முதலமைச்சரின் கருத்து. ஜாதிச் சங்கங்களின் வலுவைக் குலைக்க இத்தகைய தனிச்சட்டம் தேவைப்படுகிறது என்பதை மீண்டும் மீண்டும் அரசுக்கு வலியுறுத்த முற்போக்கு இயக்கங்கள் கடமைப்பட்டிருக்கின்றன. ‘திராவிட மாடல்’ அரசு சிந்திக்க வேண்டும்.

# கடலூர் மாவட்ட அமைப்பாளராக மதன்குமார் நியமனம்



கடலூர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம், 28.5.2024 அன்று கருவேப்பிலங்குறிச்சி வசந்தம் மகாலில் மாவட்டத் தலைவர் அ.மதன்குமார் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அமைப்பாளர் நா.கொளஞ்சி வரவேற்புரையாற்றினார். மாவட்டத் தலைவர் அ.மதன்குமார், மாவட்ட துணைத் தலைவர் செ.பிரகாஷ் ஆகியோர் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், தற்போதைய சூழல் குறித்தும் உரையாற்றினார்கள்.

மாவட்ட அமைப்பாளர் நா.கொளஞ்சி இயக்க நிலை குறித்தும், தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் ப.அறிவழகன் கழகத்தின் கடந்த கால செயல்பாடுகள் குறித்தும் தற்போதைய சூழல் குறித்தும் பேசினார்.

நிறைவாக கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, கழகத் தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார் ஆகியோர் “இன்றைய அரசியல் சூழலில் பெரியார் இயக்கத்தின் தேவை, எதிர்கால செயல்பாடுகள், இயக்க தோழர்களின் செயல்பாடுகள்” குறித்து விரிவாக உரையாற்றினார்கள்.

நிறைவாக முத்துகிருஷ்ணன் நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது.

இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் கடலூர் மாவட்டத்தில் பொறுப்புகள் அனைத்தும் கலைக்கப்பட்டு தோழர் மதன்குமார் மாவட்ட அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்டார். அவருக்கு கழகத் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

முதல் பக்கத் தொடர்ச்சி

அணிய தடை விதிக்க வேண்டும்.

- ஜாதிய அடையாளத்தை குறிக்கும் வகையில் சைக்கிள்களில் வர்ணம் தீட்டக் கூடாது.
- மாணவர்கள் செல்போன் எடுத்து வர தடை விதிக்க வேண்டும்.
- ஆறாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரையிலான மாணவர்களுக்கு, கண்டிப்பாக அறநெறி வகுப்புகள் நடத்த வேண்டும்.
- வட்டாரத்திற்கு ஒரு பயிற்சி பெற்ற ஆலோசகரை நியமிக்க வேண்டும்.
- ‘மாணவர் மனசு’ என்ற தலைப்பில், மாணவர்கள் தங்கள் குறைகளை தெரிவிக்க, புகார் பெட்டி வைக்க வேண்டும். அதை பள்ளி நல அலுவலர் வாரத்திற்கு ஒரு முறை திறந்து, அதில் வரும் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். புகார் தெரிவிக்கும் மாணவர்கள் பெயரை ரகசியமாக வைத்திருக்க வேண்டும்.
- பள்ளியில் ‘சமூக நீதி மாணவர் படை’ உருவாக்க வேண்டும். இதில், அனைத்து சமுதாய மாணவர்களும் இடம்பெற வேண்டும். அவர்களுக்கு தனி சீருடை, பயிற்சி போன்றவை வழங்கப்பட வேண்டும்.
- அனைத்து பள்ளி நிறுவனங்களையும், கல்வி அல்லாத பயன்பாட்டிற்கு அனுமதிக்க கூடாது. ஜாதி பிரச்னை அதிகம் உள்ள பகுதிகளில், அரசு சிறப்பு நுண்ணறிவுப் பிரிவை உருவாக்க வேண்டும். அப்பிரிவு சா தி பிரச்னை ஏற்படுவதை முன்கூட்டியே கண்டறிந்து, பிரச்னை ஏற்படுவதை தடுக்க, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### பாஜகவின் ஜாதியவாத முகத்திரை கிழிந்தது!

சந்துரு குழு அறிக்கை சமர்பித்த நாளில் இருந்தே பாஜக - இந்துத்துவ கூடாரங்கள் நிம்மதியிழந்து காணப்படுகின்றன. சென்னை மாநகராட்சி கவுன்சில் கூட்டத்தில் பாஜகவைச் சேர்ந்த பார்ப்பனப் பெண் கவுன்சிலர் உமா ஆனந்தன் சந்துரு அறிக்கையை கடுமையாகக் கண்டித்துப் பேசியதுடன், அதன் நகலையும் கிழித்துள்ளார். அதேபோல, தேனி மாவட்ட ஊராட்சிக் குழு கூட்டத்தில், பாஜகவைச் சேர்ந்த ஊராட்சிக் குழு துணைத் தலைவரான ராஜபாண்டி என்பவரும் அறிக்கை நகலை கிழித்துள்ளார். பாரதத் தேசத்தை பிரிக்கும் சித்தாந்தங்களைப் போதிக்கும் வகையில் சந்துரு அறிக்கை இருப்பதாக பாஜகவின் மாணவர் அமைப்பான ஏபிவிபி கண்டித்திருக்கிறது.

ஜாதிப் பிரிவினையைப் பாதுகாத்தால்தான் பாரத தேசம் பாதுகாப்பாக இருக்குமென்றால், இது எப்படிப்பட்ட பாரதம் என்பதே நமது கேள்வி. அதுமட்டுமின்றி, “கயிறு கட்டுவது, விபூதி, குங்குமம் வைத்திருப்பதை தடை செய்யச் சொல்வதா?” என்று தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, எச்.ராஜா போன்றோர் கொந்தளித்திருக்கிறார்கள். இவையெல்லாம் இந்து அடையாளங்கள் என்கிறார்கள். ‘எதற்காக இந்த கயிறு கட்டி வருகிறீர்கள்?’ என்று அந்த மாணவர்களிடம் கேட்டால், அது தங்களின் ஜாதி அடையாளம் என்று அவர்களே கூறுவார்கள். ஜாதி அடையாளம் தான் இந்து அடையாளம் என்பதை அண்ணாமலையும், எச்.ராஜாவும் ஒப்புக்கொள்கிறார்கள் என்பது இதிலிருந்தே தெரிகிறது.

‘சமூகநீதிப் படை எதற்கு?’ என்றும் அண்ணாமலை கேட்டிருக்கிறார். சாகாக்கள் எதற்கு என்று கேட்க அண்ணாமலைக்கு துணிச்சல் இருக்கிறதா? மதத்தின் பெயரால் மாணவர்களைப் பிளவுபடுத்தும் சாகாக்களைக் கொண்டுதான் நாடு முழுக்க ஆர்.எஸ்.எஸ். வேரூன்றியிருக்கிறது. அந்த வேரில் வெந்நீர் பாய்ச்ச வேண்டுமென்றால், மாணவர்களை மதவாதத்தின் பக்கம் திசைதிருப்பாமல் இருக்க இதுபோன்ற சமூகநீதிப் படை அவசியமானதே.

இன எதிரிகள் எதிர்க்கிறார்கள் என்பது ஒன்றே சந்துரு அறிக்கையின் தேவையை உணர்ந்துகொள்ள நமக்குப் போதுமானது. எனவே தமிழ்நாடு அரசு சந்துரு அறிக்கையை உடனடியாக முழுமையாக அமல்படுத்த முன்வர வேண்டும்.

# நீட் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்க!

மருத்துவர் எஸ்.காசி




நீட் 2024 தேர்வு முடிவுகள், இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. கடந்த வரு டங்களில் ஒன்று அல்லது இரண்டு மாணவர்கள் மட்டுமே 720/720 மதிப்பெண் பெற்று வந்த நிலை யில், இந்த வருடம் 67 பேர் 720/720 மதிப்பெண் பெற்றுள் ளனர். தேசிய தேர்வு முகமை (NTA) வெளியிட்ட 'இறுதி விடைகளுடன்' மாணவர்கள் தனது OMR (Optical Mark Recognition Sheet) நகலை ஒப்பிட்டுப் பார்த்த போது கிடைத்த மதிப்பெண்ணுக்கும், அறிவிக்கப்பட்ட மதிப்பெண்ணுக்கும் இடையே பெரிய வேறுபாடு இருந்ததால், முறைகேடுகள் வெளிச்சத்திற்கு வந்தன. இதனையடுத்து உச்சநீதி மன்றத்திலும், பல்வேறு மாநில உயர்நீதிமன்றங்க ளிலும் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. குஜராத் மற்றும் பீகார் மாநிலங்களில், 'நீட் தேர்வு மைய' அதிகாரிகளே பல கோடி ரூபாய் லஞ்சம் பெற்று கேள்வித்தாளைக் கசியவிட்டது, ஹரியானா மாநிலத்தில் ஒரே தேர்வு மையத்தில் தேர்வு எழுதிய மாணவர்களில் தொடர்ச்சியான தேர்வு எண் கொண்ட 6 பேர் 720/720 பெற்றது, 1563 மாணவர்களுக்கு விதி முறைகளை மீறி சட்ட விரோதமாக "கருணை மதிப்பெண்" அளித்தது போன்ற பல முறைகேடுகள் நடந்தேறியுள்ளன. தேர்வு நடத்தும் நிறு வனம், தேர்வுகள் நடைபெறும் முன்னரே அதன் விதிமுறைகளையும், மதிப்பெண் குறித்த விளக்கங்க ளையும் வெளியிடவேண்டும். தேர்வு முடிந்த பின் எந்த ஒரு விதியையும் தளர்த்தவோ, நீக்கவோ, சேர்க்கவோ முடியாது. ஆனால் அதற்கு மாறான தேசிய மருத்துவ முகமையின் (NTA) இந்தச் செயலை எதிர்த்து நாடு முழுவதும் மாணவர்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

## தகுதியும், திறமையும்

நீட் தேர்வின் மூலம் தகுதியான மாணவர்கள் மட்டுமே எம்பிபிஎஸ் படிப்பார்கள் என்று சொல்லப் பட்டது. கடந்த 8 வருடங்களாக நீட் தேர்வு அடிப்படை யில் நடத்தப்பட்ட சேர்க்கையின் புள்ளிவிவரங்கள் அதைத் தவறு என்று நிரூபித்துள்ளன. 2016-ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் மருத்துவ மாணவர் சேர்க்கை பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் நடத்தப் பட்டது. (85% இடங்கள்) மருத்துவப் படிப்பில் சேர உயிரியல், இயற்பியல் மற்றும் வேதியியல் பாடங்க ளில் 50%-க்கு குறைவாக எடுத்த மாணவர்கள் எம்பிபி எஸ் சேரமுடியாது. மேலும் 2016 வரை +2 மதிப் பெண்களின் அடிப்படையில் மருத்துவக்கல்லூரிகளில் இடம் பெற்றவர்களின் குறைந்தபட்ச மதிப் பெண்கள் (cut off marks) சராசரியாக 200-க்கு 180-க்கு மேல் இருந்திருக்கிறது. எனவே குறிப்பிட்ட 3 பாடங்களிலும் (இயற்பியல், வேதியியல், உயிரியல்) 180 மதிப்பெண்களுக்கு மேல் (அதாவது 90%) எடுப்பவர்கள் மட்டுமே மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்றனர். ஆனால் 'நீட் தேர்வில்' 'Precentile' (பெர்சன் டைல்) முறையில் குறைந்தபட்சம் 40 முதல் 50 மதிப் பெண் எடுப்பவர்கள் கூட எம்பிபிஎஸ் சேரமுடியும்.

இதனால் பணம் இருந்தால் நீட் தேர்வில் 16% முதல் 25% மதிப்பெண் பெற்றவர்கள்கூட தனியார் மருத்து வக்கல்லூரி நிர்வாக ஒதுக்கீடு இடங்களில் சேரமுடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. 350 மதிப்பெண் பெற்ற ஏழை மாணவனுக்கு பணமில்லையென்றால் 'மெடிக்கல் சீட்' மறுக்கப்படும். ஆனால் 250 மதிப்பெண் வாங்கிய பணக்கார மாணவன் மருத்துவராக முடியும். மருத்து வம் படிக்கத் தேவையான மூன்று பாடப்பிரிவுகளில், ஒன்று அல்லது இரண்டு பாடப்பிரிவுகளில் '0' (பூஜ்யம்) மதிப்பெண் பெறுபவர் கூட நீட் தேர்வு முறையில், எம்பிபிஎஸ் படிப்பில் சேருவதற்கு தகுதி பெற முடியும். உதாரணமாக உயிரியல் பாடத்தில் '0' மதிப்பெண் வாங்கிய ஒரு மாணவர், இயற்பியல் மற்றும் வேதியி யல் பாடங்கள் சேர்த்து கட் ஆஃப் (CUT OFF) மதிப் பெண்ணிற்கு மேல் எடுத்தால், ஒரு மருத்துவ சீட்டை விலைக்கு வாங்கமுடியும். இதில் தகுதி மற்றும் திறமை எங்கே இருக்கிறது? "தகுதியுள்ள மாணவர்களுக்கு பண வசதி இல்லை யென்றாலும்கூட மருத்துவ சீட் கிடைக்கவேண்டும். வணிகமயமாக்கப்பட்ட மருத்துவக் கல்விச் சூழலில் இத்தகைய மாணவர்களுக்கு இடம் கிடைப்பதை உறுதிசெய்யவேண்டும்" என்று தான் டாக்டர் ரஞ்சித் ராய் சௌத்திரி கமிட்டியும், சுகாதாரம் குறித்த 92வது நாடாளுமன்ற நிலைக்குழுவும், உச்ச நீதிமன்றமும், நுழைவுத் தேர்வைத் தனியார் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் மருத்துவச் சேர்க்கைக்கு வலியுறுத்தினார்கள். ஆனால் அதற்கு மாறாக நீட் தேர்வில் மாநில அரசு மருத்துவக்கல்லூரிகளையும் இணைத்ததன் மூலம் மருத்துவத்தில் ஏழை எளிய கிராமப்புற மாணவர்களுக்கு மருத்துவ சீட் கிடைப்ப தை மோடி அரசு தடுத்து வருகிறது.

## "கருணை மதிப்பெண்" ஊழலின் ஓர் அவதாரம்

நீட் தேர்வில் மொத்தம் 720 மதிப்பெண்கள் (180 கேள்விகள் - ஒவ்வொரு சரியான விடைக்கும் 4 மதிப் பெண்கள் வழங்கப்படும். தவறான விடைக்கு 1 மதிப் பெண்ணுடன் சேர்ந்து 5 மதிப்பெண்கள் கழியும்); எனவே ஒரு தவறான விடைக்கு 5 மதிப்பெண்கள் கழித்து 720க்கு 715 என்று தான் வர முடியும். ஆனால் சில மாணவர்கள் 717, 719 போன்ற மதிப்பெண்கள் பெற்ற தாக அறிவித்ததன் பின்னணியில் 1563 மாணவர்களு க்கு மட்டும் "கருணை" மதிப்பெண் விதிமுறைகளை மீறி வழங்கப்பட்டது தெரியவந்தது. 24லட்சம் பேர் தேர்வு எழுதிய நிலையில் 1563 பேருக்கு மட்டும் "கருணை மதிப்பெண்" அளிப்பது மோடி அரசின் கல்வித் துறையில் நடக்கும் ஊழல் இல்லையா?

## 'தேர்ச்சி' ஓர் ஏமாற்று வேலை

'நீட் தேர்வில்' சுமார் 12.5 லட்சம் பேர் 'தேர்ச்சி' பெற்ற தாக அறிவித்துள்ளனர். சுமார் 1லட்சம் மருத்துவ இடங்களே உள்ள நிலையில், கட் ஆஃப் மார்க் வாங்கினாலே 'தேர்ச்சி' என்று கூறுவதன் மூலம் மருத்துவக் கல்லூரியில் எல்லோருக்கும் நிச்சயம் இடம் கிடைக்கும் என்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். இதனால் கிராமப்புற, ஏழை எளிய மற்றும் நடுத்தரவர்க்க மாணவர்கள் கட் ஆஃப் மார்க்கி ற்கு மேல் நல்ல மதிப்பெண் பெற்றாலும், 'அரசு மருத் துவக் கல்லூரிகளில் ஒதுக்கீடு' கிடைக்காதபோது தனி யார் கட்டணக் கொள்ளைக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஏமாறும் நிலை உள்ளது.

## டம்மி (DUMMY) பள்ளிகள்

நீட் தேர்வு நடைமுறைக்கு வந்தது முதல், +1, +2 மாணவர்கள் (மெட்ரிக்குலேசன் மற்றும் சிபிஎஸ்இ), வழக்கமான பள்ளிக்குச் சென்று அனைத்துப் பாடங்க ளையும் படிப்பது என்ற நிலை மாறி, "ஒருங்கி ணைந்த பள்ளிக் கல்வி முறையில்" (Intergrated Schooling System)குறிப்பிட்ட 3 பாடங்களில் மட்டுமே கவனம் செலுத்துவது வலியுறுத்தப்படு கிறது. பள்ளிகளில் கற்பிக்கப்படும் நேரம் முடிந்து தனி யாக, பயிற்சி (கோச்சிங்)மையங்களுக்கு செல்வதற்கு பதிலாக, 'கோச்சிங் நிறுவனங்கள் தனியார் பள்ளிகளுடன் கைகோர்த்து "கோச்சிங் மையங்களையே" பள்ளிகளாக மாற்றி நடத்தி வருகின்றனர். இதன் மூலம் "பள்ளிகளில் இருக்கவேண்டிய கல்விச் சூழல் மற்றும் கற்றல் சூழலும்" புறக்கணிக்கப்படுகின்றன. இத்த கைய டம்மி (DUMMY) அல்லது போலியான பள்ளிகள் தமிழ்நாட்டிலும் உருவாகிவிட்டன.

## 'நீட் கோச்சிங்' ஏழை மாணவர்களுக்கு எட்டாக்கனி

நீட் தேர்வு நடைமுறைக்கு வந்தபின் தனியார் பயிற்சி நிறுவனங்கள் புற்றீசல் போல் தோன்றியுள்ளன. பல லட்சங்களைச் செலவு செய்து பயிற்சி எடுத்தால் மட்டுமே 'நீட்' தேர்வில் நல்ல மதிபெண்கள் கிடைக்கும் என்ற நிலையில், ஆயிரக்கணக்கான பெற்றோர் தங்கள் 'குழந்தைகள்' மீது, 'முதலீடு' செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முதல் முறைத் தேர்வு பெறவில்லையென்றால், அடுத்தடுத்த ஆண்டுகளில் மீண்டும் முயற்சி செய்கிறார்கள். கடந்த சில வருடங்க ளில் தேர்ச்சி பெற்றவர்களில் 50% - 70% மாணவர்கள் 'மீண்டும்' (Repeaters) தேர்வெழுதி தேர்ச்சி பெற்றவர் கள்தான். எனவே, நீட் பயிற்சிக்கு பிளஸ் 1-ல் தொடங்கி, மொத்தம் 2 முதல் 5 வருடங்களுக்குப் பல லட்ச ரூபாய் செலவு செய்ய வேண்டியுள்ளது.

## பி.ஜி. (PG) - நீட் தேர்வின் பாதிப்பு (PG NEET)


1500-க்கும் மேற்பட்ட முதுகலை மருத்துவ இடங்க ளுடன் (MD.,M.S.) தமிழ்நாடு அகில இந்திய அளவில் முன்னணியில் உள்ளது. 2012-க்கு முன்பு வரை, தமிழ் நாட்டில் இருந்த 15% இடங்களை மட்டுமே அகில இந்தியத் தொகுப்பிற்கு ஒதுக்கி வந்தனர். 2012ஆம் ஆண்டிற்குப் பிறகு பட்ட மேற்படிப்புக்கான நீட் தேர்வி னால் மாநில அரசின் கட்டுப்பாட்டில் 50 சதவீத இடங்க ளும், அகில இந்தியத் தொகுப்பிற்கு 50 சதவீத இடங்க ளும் ஒதுக்கப்படுகின்றன. உயர்சிறப்பு மருத்துவப் படிப்புகளில் (SUPER SPECIALITY COURSES) 100 சதவீத இடங்களும் அகில இந்தியத் தொகுப்பிற்கே ஒதுக்கப்படுகிறது. இதனால் தமிழக அரசு, தமிழக மக்களின் வரிப்பணத்தில் கட்டி எழுப்பிய சுகாதாரக் கட்டமைப்பைப் பயன்படுத்தி மற்ற மாநிலங்களி லிருந்து வரும் மருத்துவர்கள் பயன்பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் தமிழக மருத்துவ மாணவர்களுக்கு ஓர் இடம்கூடக் கிடைக்காமல் போகும் அபாயம் எழுந்துள்ளது. கடந்த காலங்க ளில் 50% அரசுப்பணிக்கான உள் ஒதுக்கீடு இருந்த காரணத்தால்தான் அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு பல்வேறு சிறப்பு மருத்துவர்களும், மருத்துவ ஆசிரி யர்களும் (Super Specialists & Medical Teach ers) கிடைத்து வந்தார்கள். தமிழகத்தில் தற்போது 36 அரசு மருத்துவக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. கடந்த 8 ஆண்டுகளில் 'நீட் தேர்வு முறையில்' முது கலை படிப்பு மற்றும் உயர் சிறப்பு மருத்துவ இடங்கள் ஒதுக்கப்பட்டதன் விளைவாக மருத்துவ ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இது, அரசு மருத்துவக் கல்லூரி / மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், சுகாதாரப் பணிகளைப் பெருமளவு பாதிக்கிறது. நாளடைவில் போதிய மருத்து வர்கள் இல்லை என்று காரணம்கூறி, அரசு மற்றும் பொது சுகாதாரக் கட்டமைப்புகளும் தனியாருக்குத் தாரை வார்க்கப்படும்.

'நீட்' தேர்வுகளின் அடிப்படை நோக்கமே பொது சுகாதாரக் கட்டமைப்பைத் தகர்த்து தனியார்ம யத்தைப் புகுத்துவதுதான். ஏழை எளிய மாணவருக்கு எதிரான, மாநில உரிமையைப் பறிக்கிற, முறைகேடு களின் முழு வடிவமாகிவிட்ட நீட் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்ய வேண்டுமென்பதே நம் கோரிக்கை.

நன்றி: தீக்கதிர்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# “நான் எரிந்து விழுந்த ராக்கெட்”



ஜூன் 25, சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் 94ஆவது பிறந்தநாள். இந்தியாவில் முதல்முறையாக அவருக்கு சிலை அமைத்த மாநிலம் தமிழ்நாடு. திராவிட மாடல் அரசு அவருக்கு முழு உருவச்சிலையை நிறுவி தமிழ்நாடு சமூகநீதி மண் என்பதை இந்திய ஒன்றியத்திற்கே உணர்த்தியது. இந்தியாவில் எந்தவொரு வீதிக்கும் வி.பி. சிங் பெயர் சூட்டியதாக வரலாறு கிடையாது. எந்தவொரு அரசுக் கட்டடத்திற்கும் அவர் பெயரை சூட்டியது இல்லை. தமிழ்நாடு மட்டும் தான் அவருக்கு உரிய மரியாதையை வழங்கியது.

வி.பி.சிங், மண்டல் அறிக்கையின் ஒரு பகுதியான அரசுப் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இட ஒதுக்கீட்டை அறிவித்தது தான் இந்திய அரசியலில் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அப்போது ராமன் கோயில் பிரச்சனையை கையில் எடுத்து வி.பி. சிங் அரசை கவிழ்த்தது பாஜக. அந்த நிலையில் தமிழ்நாடு முதல்வராக இருந்த கலைஞர், வி.பி.சிங்கை தமிழ்நாட்டிற்கு அழைத்து பல்வேறு இடங்களில் பொதுக்கூட்டங்களை நடத்தி, தமிழ்நாடு உங்களின் பின்னால் நிற்கிறது என்பதை வி.பி.சிங்கிற்கு உணர்த்தினார்.

அப்போது உணர்ச்சிவயப்பட்ட வி.பி.சிங், நாட்டின் தலைநகராக டெல்லி இருக்கலாம், ஆனால் சமூகநீதியின் தலைநகர் தமிழ்நாடு என்றும், இது பெரியார் – அண்ணா பிறந்த மண் என்றும் ஒவ்வொரு கூட்டங்களிலும் குறிப்பிட்டுப் பேசினார். அவர் முழங்கிய இந்த சமூகநீதி அரசியல் தான், தற்போது நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மையப் பிரச்சனையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இப்போதும் மதவாத சக்திகளுக்கு எதிரான ஒரு வலிமை மிகுந்த கேடயமாக இருப்பது சமூகநீதி அரசியல் தான்.

இந்திய அரசியலின் போக்கை மாற்றி, சமூகநீதி அரசியலையே மையப் பொருளாக்கிய வரலாற்றுத் தலைவர் தான் வி.பி.சிங். அவரின் தனித்துவங்கள்

**1. கர்நாடகாவில் தனது கட்சி ஆட்சியில் இருக்கும் போதே காவிரி நடுவர் மன்றத்தை அமைத்தவர்.**

**2. மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சிலை உருவாக்கினார். (InterState Council)**

**3. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கு அடித்தளமிட்டவர்.**

**4. தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடங்குவதற்கு முன்னோடியாக இருந்தார்.**

**5. இலங்கையில் தமிழர்களை கொன்றுகுவித்த இந்திய இராணுவத்தை திரும்பப் பெற்றவர்.**

இப்படி எத்தனையோ சாதனைகளைப் பட்டியலிட்டுக் காண்பிக்க முடியும். ஆனால் அவர் முற்றிலும் மாறுபட்ட ஒரு பிரதமராகத்தான் இருந்தார். தனக்குத்தானே சிபிஐ விசாரணை கமிசனை நியமித்த ஒரே அரசியல் தலைவர் வி.பி.சிங் மட்டும் தான்.

வி.பி.சிங் மகன் செயிண்ட் கிட்ஸ் தீவில் உள்ள வங்கியில் பல கோடி ரூபாய் பணம் போட்டு வைத்திருந்தார் என்று கூறி அன்றைக்கு காங்கிரஸ் கட்சியினர் போலியான ஆதாரங்களை உருவாக்கினார்கள். இதன் பின்னணியில் நரசிம்மராவ், சந்திராசாமி, வெளிநாடுகளில் பணியாற்றிய தூதர்களில் சிலர் மற்றும் அமலாக்கத்துறையினர் இருந்தனர். இது போலியானது என்பதை நிரூபிப்பதற்காக தனக்கு தானே சிபிஐ விசாரணை ஆணையம் அமைத்து தான் குற்றமற்றவர் என்பதை நிரூபித்தார்.

இந்திராகாந்தி சீக்கியர்களால் படுகொலை செய்யப்பட்ட பிறகு டெல்லியில் சீக்கியர்கள் மிகப்பெரிய அளவில் படுகொலை செய்யப்பட்டனர். அந்த சமயத்தில் கடுமையான சீக்கிய எதிர்ப்பு நிலவிவந்த சூழலில் பதவியேற்ற ஒரே வாரத்தில் பஞ்சாப் பொற்கோயிலுக்கு பாதுகாப்புத்துறையின் எச்சரிக்கையையும் மீறி சென்று, அங்கு சீக்கியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு மன்னிப்புக் கேட்ட மனிதாபிமானமிக்க ஒரு தலைவர் தான் வி.பி.சிங்.

மண்டல் பரிந்துரை அமல்படுத்தப்பட்ட பிறகு நான் வேறொரு மனிதனாகவே மாறிவிட்டேன் என்று வெளிப்படையாகவே அறிவித்தார். மண்டல் பரிந்துரை அமல்படுத்தப்பட்ட போது வடமாநிலங்களில் தீக்குளிப்புச் சம்பவங்கள் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டன. பலர் தீ வைத்துக் கொல்லப்பட்டனர். அப்போது வெவ்வேறு காரணங்களுக்காக இறந்தவர்களை எல்லாம் மண்டல் பரிந்துரைக்கு எதிராக தீக்குளித்து இறந்தனர் என்று பொய்யான செய்திகளை திட்டமிட்டு பரப்பியது வடநாட்டு ஊடகங்கள்.

அந்த சூழ்நிலையில் மாணவர்களுடன் உரையாடுவதற்கு ஒரு குழுவை அமைத்து, அவர்களுக்கு ஒரு வேண்டுகோளையும் வைத்தார் வி.பி.சிங். மாணவர்களே நீங்கள் உயிர் துறக்காதீர், என்னிடம் உங்கள் எதிர்ப்பை தெரிவிப்பதற்காகவாவது நீங்கள் உயிருடன் இருக்க வேண்டும் அல்லவா? என்று கேள்வி எழுப்பினார். போராட்டம் கடுமையாக இருந்த சமயத்தில் குஜ்ரால் போன்றவர்கள், மண்டல் பரிந்துரையை ஒத்திவைத்து விடலாம் என்ற போது, இல்லை நான் உறுதியாக இருக்கிறேன் என்று அறிவித்தார் வி.பி.சிங்.

தான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்த வி.பி.சிங், நாடாளுமன்றத்தில் நம்பிக்கை தீர்மானம் கொண்டுவந்த போது பெரியார், அம்பேத்கர், பூலே பெயர்களை குறிப்பிட்டு பேசிய அவர், ஆயிரம் நாற்காலிகள் இங்கு மாறிப்போகலாம், ஆனால் வி.பி.சிங் ஆகிய நான் இங்கு அமர்ந்து பிறப்பித்த உத்தரவு என்பது காலம் முழுவதும் நீடித்து நிற்கும் உத்தரவு என்பதை பகிரங்கமாக அறிவித்தார்.

வி.பி.சிங் தனது சாதனைகளைக் குறிப்பிடும் போது, **செயற்கைக்கோளை விண்ணுக்கு செலுத்தும் போது அதை சுமந்து செல்லுகிற ராக்கெட், செயற்கைக் கோள் மேலே சென்ற பிறகு அது எரிந்து தானாகவே கீழே விழுந்துவிடும். அதே போல் சமூகநீதியை மேலே அனுப்பிவிட்டு, அரசியலில் நான் எரிந்து போயிருக்கிறேன். அது எனக்கு கிடைத்த பெருமை என்றார்.**

தேர்தல் அரசியலில் இருந்து விலகிய பின்னர் மக்கள் அரசியலை மேற்கொண்ட தலைவரும் அவர் தான். புது டெல்லியில் தலித் மக்கள் வசிக்கும் பகுதியில் அவர்களது வீடுகள் இடிக்கப்பட்ட போது, அவர்களின் வீடுகள் இடிக்கப்படக்கூடாது. அவர்களுக்கு நில உரிமை வழங்க வேண்டும் என்று இரவு பகல் பாராமல் களத்தில் நின்று போராடியத் தலைவர் தான் சமூகநீதிக் காவலர் வி.பி.சிங்.

இந்தியப் பிரதமர்களிலேயே தனித்துவமிக்க ஒரு பிரதமராக, தமிழ்நாடு கொண்டாடும் சமூகநீதிக்கு வழிதிறந்த வி.பி.சிங் என்றென்றைக்கும் நம் நினைவில் வாழ்வார்!

**– விடுதலை இராசேந்திரன்**

## வி.பி.சிங் சிலைக்கு மரியாதை

**சமூக நீதிக் காவலரும், முன்னாள் ஒன்றியப் பிரதமருமான வி.பி. சிங் அவர்களின் 94ஆவது பிறந்தநாளையொட்டி, சார்பில் சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அவரது சிலைக்கு கழக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.**

**நிகழ்வில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன் மற்றும் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.**



## தோழர் விஜயன் தந்தை நினைவேந்தல் நிகழ்வு

வடசென்னை கழகத் தோழர் விஜயனின் தந்தை ஏகாம்பரம் அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு 23.06.2024 அன்று புளியந்தோப்பு கே.பி.பார்க்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது..



தோழர் அருள்தாஸ் தலைமையில், தட்சிணாமூர்த்தி முன்னிலையில் கூட்டம் தொடங்கியது.

நிகழ்வில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், ஏகாம்பரம் அவர்களின் படத்தை திறந்துவைத்து நினைவேந்தல் உரையாற்றினார்.

மேலும் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், வடசென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன், சிபிஐ (எம்) அன்பு, விசிக தமிழ்மணி, உள்ளிட்டோர் நினைவேந்தல் உரையாற்றினார்கள்.

தோழர் விஜயன் நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது. கூட்டத்தை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி தொகுத்து வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 28, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran